**In the Court of the Principal District Judge, Vellore District.**
**Deposition of Witness for P.W.6**
**SC.No.138/2017**

| | |
|---|---|
| **Name** | **: Zaheer Ahmed @ Jahir Ahmed** |
| **Father/Husband Name** | **: அருன்ராஷத்து** |
| **Village** | **: ஆம்பூர்** |
| **Taluk** | **: ஆம்பூர்** |
| **Caste** | **: முஸ்லீம்** |
| **Calling/Occupation** | **: --** |
| **Religion** | **: முஸ்லீம்** |
| **Age** | **: 42** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.11.2022.**

முதல் விசாரணை

. எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசல் ஆதார் அட்டையுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததின் பேரில் அசல் மனுதாரர் வசம் ஒப்படைக்கப்பட்டது) அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கதவு எண் 102/47, ப்ர்ணக்கார 3வது வீதி, பூந்தோட்டம், ஆம்பூர் என்ற விலாசத்தில் குடியிருக்கிறேன். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.2 கவுஸ்பாஷாவை தெரியும். அ.சா.3 ஷாஜஹான் தெரியும். அ.சா.4-முஸ்தரிதாஸ்-ஐ தெரியும். அ.சா.5 முரளி (எ) சீனிவாசனை தெரியாது. அ.சா.1 தெரியாது. ஆஜரில் உள்ள 2 மற்றும் 4 முதல் 6 எதிரிகளை தெரியாது. எஸ்.எஸ்.ஐ. ரவியை தெரியும். ஆஜரில் இல்லாத 3வது எதிரி நாகராஜை தெரியாது. ஆஜரில் இல்லாத 1வது மார்டின் பிரேம்ராஜை இந்த சம்பவத்திற்கு பிறகு தெரியும். இந்திய தவஹீத் ஜமா அத் இயக்கத்தில் ஆம்பூர் நகர செயலாளராக உள்ளேன். இந்த இயக்கத்தில் அ.சா.2 கவுஸ்பாஷா தெரியும். அவர் ஆம்பூர் நகர தலைவராக இருந்தார். இறந்துபோன ஷமீல் பாஷா கவுஸ்பாஷாவிற்கு மருமகன். ஷமீல் பாஷாவை தெரியும். 16.06.2015ம் தேதி காலை 10.30 மணிக்கு என் வீட்டிடம் அ.சா.2 கவுஸ்பாஷா வந்தார். என்னுடைய மருமகன் ஷமீல் பாஷா மீது காவல் நிலையத்தில் பிரச்சனை உள்ளது. வா போய் பார்த்து விட்டு வரலாம் என்று கூப்பிட்டார். 11.30 மணி அளவில் ஆம்பூர் காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு

ஷாஜஹான் இருந்தார். ஷமீல் பாஷா தாய்மாமா கலீல் பாஷா இருந்தார். நான் காவல் நிலையம் உள்ளே சென்று ஷமீல் பாஷா மீது ஏதாவது வழக்கு உள்ளதா என்று கேட்டேன். அதற்கு போலிசார் கேஸ் ஏதும் இல்லை என்று சொன்னார்கள். பிறகு நான் ஸ்டேனஷினில் இருந்து வெளியே வந்து விட்டேன். அப்போது ஒரு போலிஸ் வெளியே வந்து என்னிடம் ஒரு பெண் காணாமல் போன வழக்கில் ஷமீல் பாஷாவை விசாரிப்பதற்காக பள்ளிகொண்டா காவல்நிலையம் செல்லுமாறு சொன்னார். ஷமீல் பாஷாவை ஒரு பெண் காணாமல் போன விஷயம் குறித்து விசாரிக்க வேண்டும் என்று பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருந்து ஆம்பூர் காவல் நிலையத்திற்கு போன் மூலம் தகவல் வந்ததாகவும் எனவே எங்களை ஷமீல் பாஷாவை கூட்டிக்கொண்டு பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு செல்லுமாறு சொன்னார். அப்போது நானும் கவுஸ் பாஷாவும் ஷமீல் பாஷாவை பள்ளிகொண்டா காவல்நிலையம் அழைத்து சென்றோம். அங்கு எஸ். எஸ். ஐ. ரவி ஷமீல் பாஷாவை விசாரிக்க வேண்டும் என்று சொன்னார். எஸ்எஸ்ஐ ரவி எங்களிடம் தாங்கள் ஷமீல்பாஷாவை விசாரித்தபோது பவித்ராவை ஈரோடிலிருந்து சமாதானம் செய்து டிரெய்ன் ஏற்றி விட்டதாகவும் திரும்ப திரும்ப அதையே சொல்வதால் ஷமீல்பாஷாவின் மீது சந்தேகமாக உள்ளதாக சொன்னார். அதனால் ஷமீல்பாஷாவை மார்டின் ரிமாண்ட் செய்ய சொன்னதாக எஸ்எஸ்ஐ ரவி சொன்னார். பிறகு எங்களை கிளம்பி வீட்டுக்கு செல்லுமாறு சொல்லிவிட்டார். 19.06.2015 அன்று கவுஸ்பாஷா போன்செய்து ஷமீல்பாஷாவை அழைத்து செல்லுமாறு காவல்நிலையத்தில் சொன்னதால் தான் போய் கூட்டி வருவதாக சொன்னார். அப்போது நான் 4 மணிக்கு ஓஏஆர் தியேட்டர் அருகே நான், ஜலால், இர்பான், சகீர் அகமது ஆகியோர் காத்திருந்தோம். அதன்பிறகு அந்த இடத்தல் கவுஸ்பாஷாவும் ஷமீல்பாஷாவும் வந்தார்கள். நான் ஷமீல்பாஷாவிடம் நல்லா இருக்கிறாயா என்று கேட்டேன். அதற்கு ஷமீல் பாஷா வலது கை தூக்க முடியவில்லை. தோள்பட்டையில வலி இருப்பதாக சொன்னார். ஆணுறுப்பிலும் வலி இருப்பதாக சொன்னார். மேலும்

ஷாஜஹான் கையை கட்டிவிட்டு மார்டின் பிரேம்ராஜ், காவல் ஆய்வாளர் அடித்ததாக சொன்னார். ஷமீல் பாஷாவை ஜீப்பில் கூட்டி சென்று ஒரு கோட்டர்சோ அல்லது ஒரு அரையிலோ வைத்து அடித்ததாக சொன்னார். அதன்பிறகு மாலை 4.30 மணி இருக்கும். ஷமீல் பாஷாவை நானும், ஜலால், இர்பான், சகீர் ஆகியோர் சேர்ந்து ஆம்பூர் அரசு மருத்துவமனையில் அட்மிட் செய்தோம். அதன்பிறகு உடல்நிலை முன்னேறாததால் மேல்சிகிச்சைக்காக அடுக்கம்பாறை மற்றும் சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டதாகவும், அதன்பிறகு 26.06.2015 மாலை கவுஸ்பாஷா, ஷமீல் பாஷா காலமாகிவிட்டர் என்று சொன்னார். 28.06.2015 அன்று ஆம்பூர் நீலிகொல்லை பள்ளிவாசலில் அடக்கம் செய்தார்கள். 01.07.2016ம் தேதி இந்த வழக்கு சம்மந்தமாக சிபிசிஐடி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை (1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில்)

நான் தமிழ் ஓரளவிற்கு படிப்பேன். அப்போது எங்கள் அமைப்பில் கவுஸ் பாஷா நகர தலைவராக இருந்தார். நான் செயலாளராக இருந்தேன். நான் கவுஸ்பாஷாவிடம் நட்பாக இருந்தேன். நான் கவுஸ்பாஷாவுடன் ஆம்பூர் காவல் நிலையம் சென்று பின்னர் பள்ளிகொண்டா காவல்நிலையம் சென்றேன். பள்ளிகொண்டா காவல்நிலையத்தில் உள்ள எஸ்எஸ்ஐ ரவியை அவர் ஆம்பூர் காவல்நிலையத்தில் பணியாற்றியபோதே எனக்கு தெரியும். அதனால் அவர் பெயர் எனக்கு தெரியும். 19.06.2015 அன்று எத்தனை மணிக்கு என்னை கவுஸ்பாஷா அழைத்தார் என்றால் என்னை காவல்நிலையத்திற்கு வருமாறு அழைக்கவில்லை. எத்தனை மணிக்கு காத்திருக்குமாறு சொன்னார் என்றால் காலை 11.00 மணிக்கு பள்ளிகொண்டா காவல்நிலையத்திற்கு சென்றார். பள்ளிகொண்டா காவல்நிலையத்தில் ஆய்வாளரை கவுஸ்பாஷா எத்தனை மணிக்கு பார்த்ததாக சொன்னார் என்றால் அதுபோல் எதுவும் சொல்லவில்லை. எத்தனை மணிக்கு காவல் நிலையத்திலிருந்து வெளியே வந்ததாகவும் சொல்லவில்லை. 3.00 மணிக்கு போன் செய்தார். நாங்கள் 4.00 மணிக்கு ஓஏஆர் தியேட்டர் அருகே காத்துக்

கொண்டிருந்தோம். அப்போது ஊமீல் பாஷாவை கவுஸ்பாஷா எங்களிடம் கூட்டி வந்தார். 1.00 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து வெளியே வந்ததாக சொல்லவில்லை. சிபிசிஐடி காவல் துறையினர் என்னை விசாரிக்கும்போது எழுதிக் கொண்டார்கள். படித்து காண்பித்தார்கள் நான் அதில் கையெழுத்து போட்டேன். மார்டின் அடித்ததாக ஊமீல்பாஷா சொன்னதை மட்டும் தான் நான் போலிசில் சொன்னேன். மார்டின் பிரேம் ராஜ், ஆய்வாளர் மற்றும் 6 போலிசார் பள்ளிகொண்டா போலிஸ் கோர்ட்டர்ஸில் வைத்து கைகளை கட்டி அடித்ததாக நான் எனது போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. ஓஏஆர் தியேட்டா அருகே வைத்து ஊமீல்பாஷாவை 4.00 மணிக்கு சந்தித்தேன். 4.30 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றபோது மருத்துவர்கள் ரிப்போர்ட் எழுதினார்கள். சாப்பாட்டு ஸ லிப் யார் வாங்கினார்கள் என்றால் கவுஸ்பாஷாதான் வாங்கியிருப்பார். மருத்துவமனையில் 7.00மணி வரை இருந்தேன். கவுஸ்பாஷாவை அந்த ஊரில் 10 பேருக்கு தெரியுமா என்றால் தெரியும். மருத்துவமனையிலும் அவருக்கு பழக்கம் இருக்கும் என்றால் இருக்கும். ஊமீல் பாஷாவுடன் அன்று இரவு யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஊமீர் பாஷாவை காவல்நிலையததில் வைத்து யாரும் அடிக்கவில்லை என்றாலும் கவுஸ்பாஷா சொல்லிக்கொடுத்ததை காவல்நிலைய விசாரணையிலும், இந்த நீதிமன்றத்திலும் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவர் ஊமீல்பாஷாவிற்கு எக்ஸ்ரே எடுத்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மருத்துவமனையில் யார் சாப்பாடு வாங்கினார்கள் என்பது எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் எனக்கு தெரியாததால் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. அங்கு எத்தனை மருத்துவர்கள் சோதித்தார்கள் என்றால் எனக்கு தெரிந்து 2 மருத்துவர்கள் பரிசோதித்தார்கள். அதுபோல மருத்துவர்கள் யாரும் வந்து பார்க்கவில்லை என்றாலும் கவுஸ்பாஷா சொல்லிகொடுத்த மாதிரி சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 மணியிலிருந்து 4 மணி வரை என்ன நடந்ததே என்று தெரியாது என்றாலும் கவுஸ்பாஷா சொல்லி கொடுத்தது போல் பொய் சாட்சி அளிக்கிறேன்

என்றாலும் சரியல்ல. பள்ளிகொண்டா காவல் நிலையத்திலிருந்து ஆம்பூர் மருத்துவமனை 25 கி.மீ தூரம் இருக்கும். பஸ்ஸில் சென்றால் 1மணி நேரத்திற்கு மேல் ஆகும். 3 மணிக்கு முன்பாகவே ஜமீல்பாஷாவை கூட்டி வந்து விட்டார்கள் என்றால் எங்கள் இடம் வரும்போது 4.00 மணி. அதற்கு முன்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. எந்த காவல்துறையினரும் ஜமீல்பாஷாவை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. கவுஸ்பாஷா சொல்லிக்கொடுத்தது போல் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2 முதல் 5 எதிரிகள் - 1வது மற்றும் 6வது எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை அனுசரிக்கிறார்கள்

மறுவிசாரணை இல்லை

N VASANTHALEELA

Digitally signed by N VASANTHALEELA